**செய்தி வெளியீடு எண் : 2427** **நாள் : 05.12.2023**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் இன்று (05.12.2023) மிக்ஜாம் புயல் நிவாரணப் பணிகளை மேற்கொண்டார்.**

****

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் இன்று (05.12.2023) சென்னை, சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சின்னமலை, தாடண்டர் நகர், ஐந்து விளக்கு ஆலந்தூர் சாலை, அப்பாவு நகர், ஜோதியம்மாள் நகர் ஆகிய பகுதிகளில் மிக் ஜாம் புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உணவு, ரொட்டி, பால், மருத்துவ வசதி ஆகியவை வழங்கி மேற்கண்ட நிவாரண பணிகளை ஆய்வு மேற்கொண்டார். பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

சென்னையில் வடகிழக்கு பருவமழை என்பது வேறு எந்த மழையின் அளவையும் ஒப்பிட்டு பார்க்க முடியாத அளவிற்கு மிக கனமழையாக இருக்கின்றது. ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் திங்கள் 1ஆம் தேதி முதல் 5 ஆம் தேதி வரை 5 செ.மீ மழை பெய்வது என்பது இயல்பு. ஆனால் இந்த ஆண்டு டிசம்பர் மாதம் 1ஆம் தேதி முதல் 5ஆம் தேதி வரை சென்னை நுங்கம்பாக்கத்தில் பதிவாகி இருக்கின்ற மழையின் அளவு 58 செ.மீ. அதேபோல் மீனம்பாக்கத்தில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 1ஆம் தேதி முதல் 5ஆம் தேதி வரை மழைப்பொழிவு என்பது 5 சென்டிமீட்டர் என்பது இயல்பு. அதனால் தற்போது பெய்திருக்கும் மழையின் அளவு 50 சென்டிமீட்டர். அது மட்டுமல்லாது சென்னையில் இதுவரை இல்லாத அளவு வடகிழக்கு பருவமழையின் அளவு 29 சதவிகிதம் கூடுதலாக பெய்திருக்கிறது. இதுவரை வந்துள்ள புயல்களில் அதிக.அளவிலான பாதிப்பினை ஏற்படுத்திய புயலும் கூட இது. குறிப்பாக சென்னையை பொறுத்தவரை இவ்வளவு பெரிய மழை பெய்தும் கூட மழை நீரை கடல் உள்வாங்க வேண்டும். நேற்றுக்கு முன்தினம் வரை கடலின் சீற்றம் அதிகமாக இருந்த காரணத்தினால் முழுமையாக மழை நீர் உள்வாங்க சிரமம் ஏற்பட்டது. நேற்று அடையாறு முகத்துவாரத்தையும், பக்கிங்காம் முகத்துவாரத்தையும், மாநகராட்சி அலுவலர்களோடு நேரடியாக சென்று ஆய்வு செய்தோம். ஒவ்வொரு இடத்திலும் நூறு சதவீதம் மழை நீர் கடலில் உள்வாங்க வேண்டும். ஆனால் மழைநீர் 10% முதல் 20 % வரை மட்டுமே உள்வாங்கிக் கொண்டிருந்தது. இதனால்தான் சென்னையின் பெருவாரியான பகுதிகளில் மழை நீர் தேக்கம் என்பது இருந்தது. தற்போது மழையானது நேற்று நள்ளிரவு முதல் படிப்படியாக குறைய தொடங்கியவுடன் நீரின் அளவு வடியத் தொடங்கி இருக்கிறது. ஒரு 60% மழை நீர் வடிந்து சென்னை மாநகரம் இயல்பு நிலைக்கு திரும்பிக் கொண்டிருக்கிறது. மின் விநியோகம் துண்டிக்கப்பட்ட இடங்களில் மீண்டும் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இப்போது இருக்கின்ற பாதிப்பு என்பது பூண்டி ஏரிகளில் இருந்து திறந்து விடப்பட்ட உபரி நீரினாலும், செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து திறந்துவிடப்பட்ட உபரி நீரினாலும் ஏற்பட்டு இருக்கிறது. இந்த உபரி நீர்கள் அடையாற்றின் வழியே கடல் நீரில் கலக்க வேண்டும். அடையாற்றின் ஓரம் இருக்கின்ற குடிசைப் பகுதிகள் குறிப்பாக

ஆலந்தூர், குரோம்பேட்டை, பல்லாவரம், அம்பேத்கார் நகர், பத்மாவதி நகர் போன்ற பகுதிகளிலும், விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதியை பொறுத்தவரை எம்ஜிஆர் நகர், சூளைமேடு போன்ற பகுதிகளிலும், சைதாப்பேட்டை பகுதியை பொறுத்தவரை சாரதி நகர், ஜோதி நகர் போன்ற பகுதிகளிலும் மயிலாப்பூர் பொறுத்தவரை பட்டினப்பாக்கம் போன்ற பகுதிகளிலும் பல்வேறு குடிசைப் பகுதிகள் இதன் வாயிலாக பாதிக்கப்படுகின்றன. கடந்த 2015 ஆம் ஆண்டு பெய்த மழையின் அளவைவிட தற்பொழுது இரண்டு மடங்கு மழை பெய்து இருக்கிறது. மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் மழை நீர் வடிகால்களை கட்டிருப்பதால் மிகப் பிரதான சாலைகளில் மழைநீர்கள் வடிந்து, போக்குவரத்து சீராகிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஆற்றுக் கரையோரம் உள்ள பொதுமக்கள் நிவாரணம் முகாம்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் மடிப்பாக்கம், உள்ளகரம்,புழுதிவாக்கம் போன்ற பகுதிகளை பொறுத்தவரை அங்கே இருக்கின்ற கார்த்திகேயாபுரம் ஏரியாக இருந்தாலும், மேடவாக்கம் ஏரியாக இருந்தாலும், சித்தாலப்பாக்கம் ஏரியாக இருந்தாலும், ஒட்டியம்பாக்கம் ஏரியாக இருந்தாலும், அனைத்து ஏரிகளும் நிரம்பிய நிலையில் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள 40 ஏரிகளில் உள்ள உபரி நீர் அந்தப் பகுதிகளில் சூழ்ந்து இருக்கிறது. ஆகையால் இன்னும் 20 மணி நேரத்தில் அனைத்து மழைநீரும் வடிந்து சென்னை மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்பிவிடும் என்று மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மகேஷ்குமார், மாமான்ற உறுப்பினர்கள் மற்றும் உயரலுவலர்கள் கலந்து கொண்டனர்

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in